முருகப்பெருமான் துணை

**மகான் பரமானந்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.07.2023**, சனிக்கிழமை

1. அவதார ஞான வள்ளலே
அறமாக வாழும் அண்ணலே
அவனியில் அரங்க ஞானி உன்
ஆற்றல் பலம் கூறி இனிதே
2. இனிதே அறிவுரை ஆசிதனை
இயம்புவேன் சோபகிருது நள்ளிதிங்கள்
துணிவுபட முன்னான்கோர்திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 13 ம் நாள், 29.07.2023, சனிக்கிழமை)
தேசிகனுக்கு பரமானந்தர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வழி காட்டி மீட்கவே
ஞான அவதாரம் புரிந்தருளும்
ஞானிகள் பூசை வழிமுறை தன்னை
4. தன்னையே தவ தியானமாகவே
தனிப்பெரும் வழிபாடாக ஏற்று
அண்ணலே என அரங்கனை நாடி
அனைவரும் வணங்கி வருக
5. வருகவே மேலவர்கள் ஆசி
வரமாகக் கிட்டி இனிதே
தருமம் செய்யும் குணமும்
தனபுழக்கம் வசதிநிலை கூடி
6. கூடியே நித்ய தருமம் செய்து
குருவடி பெரும் பாதுகாப்பென
நாடியே சேவைகள் ஆகியே
நமனை வெல்லும் சக்திகூடி

7. கூடியே குருவருள் ஆசிபட
குறையிலா உயர் மக்களாகிட
தேடியே ஞானிகள் வலிய வந்து
திருவருளை காட்டும் வரம் கூடி
8. கூடியே கலிவாழ் மக்கள்
குருவருளால் திருவருளடைந்து
இடர்களை வென்று இனிதே
எல்லா வளமும் கண்டடைவர்
9. அடையவே தருமவான்களாகி
ஆக்கினை முன்வினை வழிவரும்
தடைகளை எல்லாம் போக்கி
தரணியையே மீட்கும் சக்தி
10. சக்திமிக்கவர்களாகத் தேறி
சன்மார்க்கம் விட்டு அகலா
சக்தி மான்களாக உலகோர்
சர்வபலமும் கண்டடைவர்
11. அடையவே ஞானத் தலைமை
அமைய வழிவகை செய்து
சோடையிலா ஞான ஆட்சிபடைப்பர்
செப்பிய அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–